திரு. தங்கமணி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் 'இந்தத் தீர்மானம் காரணம் காட்டாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, இது முறைகேடான தீர்மானம்' என்று கூறினர்கள். ஆனல், இந்தத் தீர்மானத்தைக் கொடுப்பதுபற்றி இருக்கின்ற விதி முறைகளில் காரணத்தோடுதான் கொடுக்க வேண்டுமென்று இல்லை. மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரும்போதுகூட காரணம் காட்டியும் கொடுக்கலாம், காரணம் காட்டாமலும் தீர்மானம் கொடுக்கலாம். அந்த வகையிலே தீர்மானங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லையென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. உரா. எட்மண்ட் : என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர்—நீங்கள் ஒரு தீர்மானத்தை வாசிக்க எழுந்து நிற்கிறீர்கள். சபாநாயகர் எழுந்து நிற்கும்போது ஒழுங்குப் பிரச்சினையை யாரும் கொண்டு வரலாம். ஒரு உறுப்பினர், அதுவும் ஒரு கட்சியின் தலைவர் ஒழுங்குப் பிரச்சினை என்று கேட்டு எழுந்து நிற்கும்போது 'அது என்ன ஒழுங்குப் பிரச்சினை?' என்று தாங்கள் கேட்டிருக்க வேண்டும். உங்களுடைய நோக்கம் எல்லாம் எப்படியாவது தீர்மானத்தை வாசித்து சட்டமன்றத்தின் அனுமதியைப் பெற்று விட வேண்டுமென்றிருந்த காரணத்தால் . . (மணி அடிக்கப் பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயின்ட் ஆப் ஆர்டர். அடுத்து, 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. பாலையா.

(5) 1974-75-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்.

*** திரு. ஏ. பாலையா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களை நான் கூற விழைகிறேன்.

1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சுமார் 10 கோடி ரூபாய்க்கு அதிகமாக வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இது சுமார் 12.56 கோடி ரூபாய் பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையாக

இருக்கிறது. இந்த அறிக்கையைப் படிக்கின்ற நேரத்தில் இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதமான நல்ல காரியங்களாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்று பார்க்கையில் அதிலே ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த நாட்டில் வாழ்கின்ற கோடானுகோடி மக்களுடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்காகவும், அவர்களுடைய வாழ்க்கையில் இருக்கின்ற இல்லாமை, வறுமை இவைகளைப் போக்குவதற்காகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காகவும் விஷமென ஏறும் விலைவாசியைக் குறைக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று சொல்லலாம். சுருக்கமாக இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்களுக்கு இன்றைய பொருளாதாரக் கஷ்டங்களை நீக்குகின்ற அளவில் எந்தவிதமான திட்டங்களும் இல்லை என்பது தெளிவாகிறது.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகிற அதே நேரத்தில், படித்தவர்கள், தொழிலாளிகள் இவர்கள் வேலைவாய்ப்புகள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமை தமிழகத்தில் இருக்கிறது. அவைகளை தீர்ப்பதற்கான வழிவகைகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படவில்லை.

தேர்தல் காலத்திலே இப்போது ஆளுகின்ற கட்சியினர், 'வரியைக் குறைப்போம்; மக்களுடைய வசதிகளைப் பெருக்குவோம்' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் வரி உயர்வானது ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற வகையில் உயர்ந்திருக்கின்றது. வரி உயர்வின் காரணமாக ஏழை எளிய மக்கள் வாங்குகின்ற பண்டங்களின் விலைகள் மிக வேகமாக ஏறிக் கொண்டே செல்வதை நாம் பார்க்கின்றோம். வரி உயர்வினால் இன்று பாதிக்கப்படுகிறவர்கள், அதனால் கஷ்டப்படுகிறவர்கள் ஏழை எளிய மக்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது.

முக்கியமாக, அரிசிப் பிரச்சினை இன்று ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. தேர்தல் காலத்தில் ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னது. ஆனால் இன்றைய தினம் அரிசி

வாங்க முடியாத அளவிலே விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக, நம்முடைய மாநிலத்தில் பசுமைப் புரட்சித் திட்டத்தின்கீழ் ஏராளமான உற்பத்தியை நாம் பெருக்கி இருக்கிறோம் என்ற புள்ளி விவரங்களை இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

1966-67-ல் நம்முடைய மாநிலத்தில் அரிசி உற்பத்தி 35 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. 1973-ல் அரிசி உற்பத்தி 55 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது. ஆக, பார்க்கும்போது 17 லட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி அதிகரித்திருந்தும் அரிசி விலையைக் குறைக்க முடியவில்லை.

1967-ல் ஒரு கிலோ அரிசி 80 பைசாவுக்கு நியாய விலைக் கடைகளில் விற்கப்பட்டது. ஆனால் 17 லட்சம் மெட்ரிக் டன் அரிசி அதிகப்படியாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்ற இன்று ஒரு கிலோ அரிசி ரூ. 1.50-க்கு நியாய விலைக் கடைகளில் விற்கப் படுகின்ற அவல நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. 17 லட்சம் டன் அரிசி அதிகமாக உற்பத்தி செய்தும் ஏன் விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டும்.

இன்று சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக அரிசி கொள்முதல் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அரிசி கொள்முதல் செய்து தன்னுடைய கிளை டெப்போக்களின் மூலம் விநியோகம் செய்கிறது. அதுமட்டுமல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக அரிசி விநியோகம் செய்யப் படுகிறது. கழிந்த மாதத்தில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் கொள்முதல் செய்த அரிசி அத்தனையும் உளுத்துப் போன அரிசியாக, டெக்னி கலர் அரிசியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் விநியோகம் செய்தார்கள். ஆனால் சிவில் சப்ளை கார்ப்ப ரேஷனுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் பொருந்திப் போவதில்லை.

மக்கள் எங்களுக்கு மோசமான அரிசி வழங்கப்படுகிறது, உளுத்துப் போன அரிசி, புழுத்துப் போன அரிசி வழங்கப் படுகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கண்டு குறைகளைச் சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அதிகாரிகளை அழைத்து நல்ல அரிசியாக

கொள்முதல் செய்து ஏழை மக்களுக்கு நல்ல அரிசியைக் கொடுங்கள் என்று கூறுகிறார். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லுவதை அவர்கள் கேட்பதில்லை. அதையும் மீறி மோசமான அரிசியைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்வதைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். இதன் காரணமாக சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் தகராறுகள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. தனியார் வியாபாரி தவறு செய்தால் சிறைவாசம் கொடுப்பதைப் போல் ஏன் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அதிகாரிகள் செய்கிற தவறுகளை எல்லாம் கண்டித்து தண்டனை கொடுக்கக் கூடாது.

சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம் அரிசி பல டிப்போக்களில் விற்பனை செய்யப்படுகிறது. அந்த டிப்போக்களில் இரண்டாயிரம் கார்டுகள் வரையில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த இரண்டாயிரம் கார்டுகளை வைத்து அந்த டிப்போக்களில் அரிசி விநியோகம் செய்யப்பட்டும் கூட சிவில் சப்ளை கார்ப்பரேஷன் வைத்திருக்கக் கூடிய டிப்போக்கள் மிகவும் நஷ்ட கணக்கில் நடந்து கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் 500 கார்டுகளை வைத்து அரிசி வியாபாரம் செய்கிற சின்னஞ்சிறு கூட்டுறவு சங்கங்கள் லாபகரமாக அந்த வியாபாரத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. ஆகவே நஷ்டத்தில் நடக்கக்கூடிய சிவில் சப்ளை கார்ப்பரேஷன் டிப்போக்களை ரத்து செய்து விட்டு லாபகரமாக இயங்கக் கூடிய எல்லாவித கூட்டுறவு சங்கங்களும் கார்டுகளை பிரித்து கொடுத்து அரிசி விநியோகம் செய்யப்பட வேண்டும்.

எங்கள் மிக முக்கியமான கோரிக்கையாக இருந்தது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் துறைமுகம். இந்த குளச்சல் துறைமுகத்தை மீன் பிடி துறைமுகமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக நாங்கள் முயற்சித்துக்கொண்டிருக்கிறோம். இந்த முயற்சிக்கு இந்த அரசு எந்தவிதமான ஆதரவையும், இதுவரையில் எங்களுக்கு நல்கவில்லை. அந்தத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமானால், அது ஒரு மீன்பிடி துறைமுகமாக ஆக்கப்படுமானால் கன்னியாகுமரி மாவட்டம் வாணிபத் துறையில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும் என்று சொல்லிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

இயற்கையான, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கவேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீட்டினையும் இந்த அரசு செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

குளச்சலில் மீன் பிடி பயிற்சி நிலையம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த மீன்பிடி பயிற்சி நிலையம் 1964-ல் இருந்து நடந்து கொண்டிருக்கிறது. இங்கு மீன் பிடிப்பதற்கான பயிற்சிகள், போட்டுகளை எப்படி ஓட்ட வேண்டும் என்பதற்கான பயிற்சிகளை எல்லாம் இங்கே கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் திடீரென்று அந்த மீன் பிடி பயிற்சி நிலையத்தினை கன்னியாகுமரிக்கு மாற்றப்போவதாக மீனவர்கள் மத்தியில் ஒரு ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே குளச்சலில் இருக்கிற அந்த மீன் பிடி பயிற்சி நிலையத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் வேறு இடத்திற்கு மாற்றக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் வட்டாரத்தைப் பொறுத்தவரையில் இந்த மீன் பிடி பயிற்சி நிலையத்தை மாற்றுவதற்கான உத்தரவினை அரசாங்கம் வழங்கி விட்டது என்பதை அறிந்து அந்த நிலையத்தை மாற்றக் கூடாது என்பதற்காக ஒரு போராட்டக் குழுவை அமைத்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பயிற்சி நிலையத்தை அங்கிருந்து மாற்றக் கூடாது என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசு கல்விக்காக 110 கோடி ரூபாய்க்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் 178 கல்லூரிகள் உள்ளன. அதில் அரசுக் கல்லூரிகள் 51 இருக்கின்றன. தனியார் கல்லூரிகள் 127 இருக்கின்றன. இன்று கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தனியார் கல்லூரிகளை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. தனியார் கல்லூரி நிர்வாகிகள் எந்த மோசடிகள் நடத்தினாலும், எந்தத் தவறுகளைச் செய்தாலும் அதைத் தட்டிக் கேட்க முடியாத ஒரு நிலை அரசுக்கு இருந்து கொண்டிருக்கிறது.

கேரளா மாநிலத்தில் தனியார் கல்லூரிகள் ஏராளமாக இயங்கிக் கொண்டிருந்தன. அந்த தனியார் கல்லூரிகள் ஏராள மான தவறுகளைச் செய்து கொண்டிருந்தன. அதிகப்படியான

மோசடிகளை செய்து கொண்டிருந்தன. அவற்றை அகற்றுவதற்காக கேரள அரசு அந்தக் கல்லூரிகள் அனைத்தையும் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமென்று ஒரு திட்டத்தை வகுத்து அங்கு ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதேபோல் தனியார் கல்லூரி நிர்வாகிகள் தவறு செய்தால் அதைத் தட்டிக் கேட்கும் உரிமை இன்றையதினம் தமிழக அரசுக்கு இல்லை. ஆகவே, அந்த உரிமையைப் பெறுவதற்காக, தனியார் கல்லூரிகள் அனைத்தும் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட் பட்டு செயல்படுத்துவதற்காக தனியார் கல்லூரிகளை முழு அளவில் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

தற்போது தனியார் கல்லூரிகள் தவறு செய்தால் அல்லது வேறு காரணங்களுக்காக தவறுகள் ஏற்பட்டால் அந்தக் கல்லூரி களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அனுமதியை ரத்து செய்வதற்குத்தான் இன்றையதினம் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள், நிர்வாகிகள் தாங்கள் எதையும் செய்யலாம் யாரும் கேட்க முடியாது என்ற ஒரு தனி நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்நிலையைத் தவிர்ப்பதற்காக இந்த அரசு அதுகுறித்து பரிசிலனை செய்து ஒரு சட்டத்தை நிச்சயமாக நிறை வேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்காக ஏராளமான தொகையை அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. 1974-75-ம் ஆண்டுக்காக ரூபாய் 68,89,00,000 விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஏராளமான தொகை விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டு செலவு செய்ததன் மூலம் ஏராளமான உணவுப் பண்டங்களை உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக தமிழ் நாடு உணவுத் துறையில் ஒரு உபரி மாநிலமாக இருந்துகொண்டி ருக்கிறது.

கழிந்த ஆண்டுகளில் விவசாயிகளுக்கு இரசாயன உரம் சரியான முறையில் சரியான நேரத்தில் கிடைக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. 52 ரூபாய் விலை உள்ள ஒரு அந்தர் மூட்டை யூரியா ரூ. 110-க்கு கள்ள மார்க்கட்டில் விற்கப்பட்டது. 110 ரூபாய்க்கு வாங்கி வயல்களில் போடக்கூடிய ஒரு அவல நிலை

விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இப்படி கள்ள மார்க்கட்டில் இரசாயன உரங்களை வாங்கி போடுவதாக இருந்தால் எப்படி விவசாயிகள் விவசாயம் செய்து தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளமுடியும் என்று கேட்கிறேன். இன்றையதினம் விவசாயிகள் கள்ள மார்க்கட்டில் உரம் வாங்கிப் போடுவதன் காரணமாக அவர்கள் வேதனைப்படுகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசாங்கம் விவசாயிகளுக்கு எப்போது உரம் தேவையோ அந்த நேரத்தில் அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைக்கு . . .

(திரு. கு. காமாட்சி அவர்கள் தலைமை.)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆன் எ பாயின்ட் ஆப் எலுஸிடேஷன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய உரையில் சொல்லியிருக்கிறார்கள் இதைப் பற்றி. தனியார்களுக்கு உரம் விற்கிற அந்த உரிமை கொடுக்கப்படுவதால்தான் கள்ள மார்க்கெட் உண்டாகிறது என்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறைக்கு இனிமேல் விற்பதற்கு உரம் கொடுக்கக்கூடாது, தனியார் துறை மூலம் விநியோகம் செய்யக் கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறார்களா என்பதற்கு விடை பெற விரும்புகிறேன்.

(4) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவைத் துணைத் தலைவரை தலைமை வகிக்க அனுமதிக்க மறுத்ததாகக் கூறப்படுவது குறித்து

DR. H. V. HANDE : Sir, on a point of order. The Hon. Speaker has just now left the Chair and a member of the Panel of Chairmen is occupying the Chair. As per our rules, 'at the commencement of every session or from time to time, as the case may be, the Speaker may nominate from amongst the members of the Assembly a panel of not more than six-Chairmen, any one of whom may preside over the Assembly in the absence of the Speaker and the Deputy Speaker when so requested by the Speaker or, in his absence, by the Deputy Speaker or, in his absence also, by the Chairman presiding . . . "
Now, the Hon. Deputy Speaker, the hon. Mr. Srinivasan is still in office. A no-confidence motion that has been tabled **(Interruption) I am on a point of order (Interruptions).**